பட்டிபுலம் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - L. வரலட்சுமி லட்சுமிகாந்தன்

ந.க.எண். 12 /2024/ ஊ.த நாள் : 10.06.2024

பொருள் : - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், பட்டிபுலம் ஊராட்சி பட்டிபுலம் கிராமம் திருமதி.P.சாந்தி க/பெ. பத்மநாதன், கொட்டிவாக்கம் என்பவரின் சர்வே எண். 223/2A2 –ல் சதுர அடி மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை - இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மாமல்லபுரம் அவர்களின் ம.வ./ மா.உ.தி.கு (செ.மா)எண். 54/2024

2. இதே எண்ணிட்ட இவ்வலுவக கடித நாள். 07.06.2024

3. பட்டிபுலம் உராட்சி மன்றத் தீர்மானம் எண். 05 நாள். 10.06.2024

4. காசோலை எண்.279933 நாள் 10.06.2024

<u>உத்தரவு</u>

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், பட்டிபுலம் ஊராட்சி, பட்டிபுலம் கிராமம் திருமதி. P. சாந்தி க/பெ. பத்மநாபன் என்பவரின் சர்வே எண். 223/2A2 மற்றும் 28320 சதுர அடி மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவிற்கு உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம் மாவட்ட நகர் புற ஊரமைப்பு துறை அவர்களின் நடவடிக்கைகளின்படி, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சாலைகள் (மூலை முடுக்கு உட்பட) பரப்பு 6329 சதுர அடி தானப்பத்திரம் 4692/2024 நாள் 01.03.2024ன்படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ. 2,27,650 (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தி ஏழாயிரத்தி ஆறு நூற்று ஐம்பது மட்டும்) ஊராட்சியில் செலுத்தப்பட்டதின் அடிப்படையிலும் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடுப்படுகிறது:

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் குத்தகை பத்திரம், பட்டா, தனாப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே

சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2. மேற்படி மனைப்பரிவில் தானப்பத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

4. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

5. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின் அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர்
பட்டிபுலம் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்:
திருமதி. P. சாந்தி க/பெ. பத்மநாபன்,
1/292 (C3) கொட்டிவாக்கம்,
சென்னை - 600 041.